பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

24 12 2024 **TUESDAY** 6 45 **AM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சவால்களை எதிர்கொள்ள அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
- பாரம்பரிய கலைகளையும், கலைஞர்களையும் ஊக்குவிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.
- தமிழக பள்ளிகளில் தேர்ச்சி முறையில் தற்போதைய நடைமுறையே தொடரும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.
- தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், துறை சார்ந்த விவரங்களை அறிந்து பொறுப்புடன் செயல்பட வேண்டும் என பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.
- இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி வதோதராவில் இன்று நடைபெறுகிறது

>>>>>><<<<<<<

சவால்களை எதிர்கொள்ள அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் கத்தோலிக்க பிஷப் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், கடமையையும், தன்னலமற்ற சேவையையும் இயேசு கிறிஸ்து உலகிற்கு போதித்ததாக கூறினார்.

இவற்றை வாழ்வில் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அனைவரின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் மத்திய அரசு அக்கறையுடன் செயல்படுவதாக பிரதமர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீண்டுள்ளதாக கூறிய அவர், நாட்டை தன்னம்பிக்கையுடன் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளதாக கூறினார்.

இளைஞர்களிடையே தன்னம்பிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையும் திரு. நரேந்திர மோடி எடுத்துரைத்தார்.

>>>>>><<<<<<<

பாரம்பரிய கலைகளையும், கலைஞர்களையும் ஊக்குவிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

சென்னை, கலாஷேத்ராவில் 71வது ஆண்டு கலைத்திருவிழாவை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், தேச ஒற்றுமையை பாதுகாப்பதில் கலாச்சாரம் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாடுகளில், பன்முக கலாச்சாரம் அனைவரையும் ஒருங்கிணைப்பதாக அவர் கூறினார்.

வளர்ச்சியுடன், கலாச்சார மேம்பாட்டிற்கும் மத்திய அரசு முக்கியத்துவம் அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் கலைகளை ஊக்குவிக்கவும், கலாச்சாரத்தை பாதுகாக்கவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

>>>>>><<<<<<<

சிறுபான்மையினரின் நலனுக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக முதலமைச்சரும், திமுக தலைவருமான திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் திமுக சிறுபான்மையினர் பிரிவின் சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கையை அடிப்படையாக கொண்டு மாநில அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

தேவாலயங்களை சீரமைக்கும் திட்டத்திற்கு கடந்த இரண்டாண்டுகளில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை புதுப்பிப்பதற்கான மானியம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

தமிழக பள்ளிகளில் தேர்ச்சி முறையில் தற்போதைய நடைமுறையே தொடரும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கல்வி உரிமைச் சட்டத்தில் மத்திய அரசு கொண்டுவந்துள்ள திருத்தங்களால் தமிழக பள்ளிகளின் தேர்ச்சி முறையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த புதிய நடவடிக்கை, மாநிலத்தில் செயல்பட்டு மத்திய அரசு பள்ளிகளுக்கு மட்டுமே பொருந்தும் என அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

துறை சார்ந்த விவரங்களை அறிந்து, தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அரசு பள்ளிகளுக்கான இணையதள சேவைக்கான கட்டணம் நிலுவையில் இருப்பதை சுட்டிக்காட்டிய போது, அதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மறுத்ததாக கூறியுள்ளார்.

நிலுவைத் தொகை இருப்பதை ஆதாரத்துடன் நிரூபித்த பின்னர் அதை செலுத்த பள்ளிக் கல்வித்துறை ஆணை பிறப்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சருக்கு தமது துறைசார்ந்த விவரங்கள் தெரியவில்லையா அல்லது, அது தெரிந்தே மறுத்தாரா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அமைச்சர் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று திரு. அண்ணாமலை கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டத்தில் பாலினப் பாகுபாடு, மற்றும் வன்முறைக்கு எதிரான தேசிய அளவிலான விழிப்புணர்வு இயக்கம் சிறப்பாக நடைபெற்றது.

மாவட்டத்தில் இந்த இயக்கத்தின் கீழ், 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளதாக மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. சதிஷ்பாபு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சதிஷ்பாபு 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

நாகை மாவட்டம், வேளாங்கண்ணியில் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி, பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மக்கள் பிரார்த்தனைக்கு வந்துள்ளனர்.

நேற்றிரவு நடைபெற்ற ஊர்வலத்தில் ஏராளமானோர் உற்சாகத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<<

வடதமிழக கடலோரப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பிற பகுதிகளில் சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

உள் தமிழகத்தின் சில இடங்களில் அதிகாலை நேரங்களில் கடும் மூடுபனி நிலவும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

கிழக்கு யுக்ரைனில் மேலும் இரண்டு கிராமங்களை ரஷ்யா கைப்பற்றியுள்ளது.

>>>>>><<<<<<<

ஜப்பானின் **Sakurajima** பகுதியில் எரிமலை வெடித்ததை அடுத்து, அப்பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

>>>>>><<<<<<<

சிக்கிம் மாநிலத்தில் ஆயுர்வேத மருத்துவ முறையை ஊக்குவிப்பது குறித்து ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<<

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மத்திய அரசு சார்பில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்றும் நாளையும் ஆய்வு செய்கிறார்.

>>>>>><<<<<<<

பல்வேறு சேவைகளை விரிவுபடுத்தும் வகையில், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், மேம்படுத்தப்பட்ட இணையதளமான **https://trai.gov.in/** என்ற வலைதள பக்கத்தை அறிமுகம் செய்துள்ளது.

>>>>>><<<<<<

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடன், 500 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

>>>>>><<<<<<

பாம்பனில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரயில் பாலத்தை மத்திய கனரக தொழில் துறை இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

தந்தை பெரியாரின் 51-வது நினைவு தினமும், மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரனின் 37-வது நினைவு தினமும் இன்று அனுசரிக்கப்படுகிறது.

>>>>>><<<<<<

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது தவறிவிழுந்து உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழக அரசின் புத்தொழில் ஆதார நிதி திட்டத்தின்கீழ், பயன்பெற விரும்பும் புத்தொழில் நிறுவனங்கள் ஜனவரி 15ஆம் தேதிக்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என மாநில அரசு கூறியுள்ளது.

>>>>>><<<<<<

காஞ்சிபுரத்தில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 27ஆம் தேதி நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் திரு. பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் 1 கோடியே 24 லட்சம் ரூபாய் உண்டியல் காணிக்கையாக பெறப்பட்டதாக கோவில் நிர்வாகம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

வதோதராவில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

>>>>>><<<<<<<

தேசிய சீனியர் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் தமிழகத்தின் நவீன் - லோகேஷ் இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், நேற்றைய அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை கர்நாடகாவின் **Ashith Surya - Vaibav** இணையை வென்றது.

>>>>>><<<<<<